விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 245 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 04 திங்கட்கிழமை (21.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நெல்லியடியில் அதிகாலை விபத்து; ஸ்தலத்தில் இரு இளைஞர்கள் பலி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி கொடிகாமம் வீதியில், கோயில் சந்தைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மரண வீடு ஒன்றிற்கு சென்று விட்டு கொடிகாமம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்திற்கு உள்ளாகியதில் சம்பவ இடத்திலேயே இருவரும் மரண 15



## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



15

## மூன்று இடங்களில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் உயிரிழப்பு இருவர் காயம்




(கொழும்பு)

நாட்டில் மூன்று இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாய பிரதேசத் 15

# குருந்தூர் பொங்கலே தமிழர்களின் இறுதி பூஜை

### குருந்தூர்மலை விகாராதிபதி



(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நடைபெற்ற பொங்கல் வழிபாடே தமிழர்களின் இறுதி பூஜையாக இருக்க வேண்டும் என குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாடு தொடர்பில கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த குருந்தூர் மலையை ஒருபோதும் தமிழர்களுக்கு விட்டுக்கொடுக்க போவதில்லை.

சம்பிரதாய ரீதியான இந்து மக்கள் இவ்வாறான நட்வடிக்கைகளை முன்னெடுக்கமாட்டார்கள்.

வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழ்வதை விரும்பாத தரப்பினர் விகாரையின் கட்டுமான பணிகளை எதிர்த்தனர்.

இவ்வாறான இன வாதத்தை தூண்டும் 15

### விசுவமடுவில்

## டிப்பர் - மோ.சைக்கிள் மோதி கோர விபத்து

### ஒருவர் பலி

(புதுக்குடியிருப்பு)

விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக் 15

## தட்டுப்பாடு ஏற்படாவிட்டாலும் அரிசி விலை அதிகரிக்கும்

### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர



(கொழும்பு)

எதிர்காலத்தில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாவிட்டாலும் சந்தையில் அரிசியின் விலை ஓரளவுக்கு அதிகரிக்கும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்ய ஆரம் 15

## "உலகச் சம்பியன்" ஸ்பெயின்

### பெண்கள் கால்பந்தில் கலக்கல்



பெண்களுக்கான 9ஆவது உலகக் கிண்ணத் கால்பந்து தொடரில் ஸ்பெயின் அணி சம்பியனாகியது. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை 1 : 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

## வவுனியாவில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

### ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் உள்ள மதுபானசாலை ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள 15

### பயணிகள் கப்பல் சேவை

## ஒப்புதல் வழங்கியது இந்திய மத்திய அரசு

(கெவாடியா)

இலங்கைக்கு பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க இந்தியாவின் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாக தமிழகத்தின் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர் ஏ.வி.வேலு தெரிவித்துள்ளார்.


குஜராத்தில் உள்ள கெவாடியாவில் இடம் பெற்ற ஊடக சந்திப் 15

## ஜனாதிபதி இன்று சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று மாலை வைரவர் உற்சவமும் புதிய சப்பரத வெள்ளோட்டமும் இடம்பெற்றது.

(படம் : சிவசாந்தன்)

## திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று மு.ப 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். (4,7)

## ஐரோப்பாவில் தமிழை வளர்த்தது யாழ்ப்பாணத்துத் தமிழர்களே!

### முன்னாள் இந்திய துணைத் தூதுவர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நான் சென்று ஐந்து வருடத்திற்கு மேலாகியும் யாழ்ப்பாண மக்களை மறக்கவில்லை. ஐரோப்பாவிலும் கூட நமது தாய்மொழி கலாசாரங்களை வளர்த்தது யாழ்ப்பாணத் தமிழர்கள் தான் என முன்னாள் இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஆ.நடராஜன் தெரிவித்தார்

யாழில் நேற்று இடம்பெற்ற பரத ஆடல் அரங்கேற்றம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


இங்கு வந்தபோது சில நண்பர்கள் யாழ்ப்பாணத்தை மறந்து விட்டீர்களா என கூறிய போது யாழ்ப்பாணம் எனது சொந்த வீடு எனப் பதிலளித்தேன்.

இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்தாலும் அடிக்கடி யாழ்ப்பாணம் நினைவுக்கு வருகின்றது. தமிழ் எங்கிருந்து வருகின்றது என எமது மக்களுக்குத் தெரிகின்றது.

அங்கு தமிழ் கதைக்கும் போது இலங்கைத் தமிழ் மொழியின் ஜாடை உள்ளதாக சிலர் குறிப்பிட்டனர்.

ஐரோப்பாவிலும் கூட நமது தாய்மொழி கலாசாரங்களை வளர்த்தது யாழ்ப்பாணத் தமிழர்கள் தான். எனத் தெரிவித்தார். (4,7)

31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



எமது நிலையத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திரு.க.சிதம்பரநாதன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

அப்பையா கணேசன்

அவர்களின் 31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம். அத்துடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர்

(16774)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com

வேலைவாய்ப்பு

- வெப்மெசின் இயக்குநர் (அனுபவமுள்ளவர்கள்)
- வெப்மெசின் பயிலுனர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)

குறிப்பு :

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு

076 097 3121

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16779)

தொடர்புகளுக்கு:- குரு

077 874 3204, 077 288 0152, 077 076 0389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கோட்டாவின் ஆட்சியல்ல; இங்கு சதித்திட்டங்களுக்கு இடமில்லை

## ஜனாதிபதி ரணில் கர்ச்சிப்பு

(கொழும்பு)

**“இது கோட்டாபயவின் ஆட்சி அல்ல; இது ரணிலின் ஆட்சி. எந்தச் சதித் திட்டங்களுக்கும் இங்கு இடமில்லை” என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மக்களுக்காகவே நாட்டை பொறுப்பேற்றேன். எந்தத் தடைகள் வந்தாலும் மக்கள் பலத்துடன் அதனைத் தகர்த் தெறிந்து நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக மீட்டெடுப்பேன்.


மீண்டெழுந்து வரும் நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்லத் திரைமறைவில் நடக்கும் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சிகள் தவிடுபொடியாகும்.

அந்தச் சூழ் ச்சிகளை, சதித் திட்டங்களை மக்கள் ஒரு போதும் ஆதரிக்க மாட்டார் கள்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதார மறு மலர்ச்சியை ஏற்படுத்துவேன். கஷ்டப்படும் மக்கள் மீண் டெழுவார்கள்.

மக்களின் அனைத்து பிரச் சினைகளுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுடன் பேசி தீர்வு காண்பேன்" என அவர் தெரிவித் தார். (நி)



## மசகு எண்ணெய் விலை சற்று உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண் ணெய் விலையில் சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84.80 அமெரிக்க டொலராக உள் ளது.

டபிள்யூ. டி.ஐ மசகு எண் ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.25 அமெரிக்க டொலராக பதிவாகியுள் ளது.

கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில், டபிள்யூ.டி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன் றின் அதிகபட்ச விலை கடந்த 9 ஆம் திகதி 84.40 அமெரிக்க டொலராக பதிவாகியிருந் தது. (நி)





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடி யேற்றத்துக்கான கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு யாழ்.சட்டநாதர் சிவன் ஆலய த்திற்கு அருகில் உள்ள வேல் முருகன் ஆலயத்தில் இருந்து எடுத்து வரும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

# வெங்காயத்தின் விலை அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதி வெங்காயத்தின் விலை அதி கரிக்க வாய்ப்புள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இந்தியாவில் கடந்த சில வாரங்களாகவே வெங்காயத் தின் விலை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், விலை உய ர்வைக் கட்டுப்படுத்த வெங்காய ஏற்றுமதிக்கு 40 சதவீத வரியை உயர்த்தியு ள்ளது மத்திய அரசு.

வெங்காயம் மீதான இந்த ஏற்றுமதி வரி விதிப்பு வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மலேசியா மற் றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு இந்தியா வெங்காயத்தை ஏற்றுமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர்கள், ஆன்மீக நாட்டமுள்ளவர்கள் மற்றும் இந்தியாவிலுள்ள சிதம்பர நடராஜர் ஆலயத்தின் வடக்கு மடத்தின் சங்கானையிலுள்ள சங்கானைமடம் கிளையும் இணைந்து நடாத்தும்

நல்லைக்கந்தன் வருடாந்த உற்சவகால மோர் விநியோகம் மற்றும் ஆன்மீக சமூக மேம்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள்



இடம்-நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம், நல்லூர்.
காலம்- 21.08.2023 திங்கட்கிழமை, காலை 9.00 தொடக்கம் 1 மணிவரை

**திருமுன்னிலை**
வணக்கத்திற்குரிய
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

**தலைமை**
Dr.Mrs.Veeramankai stalina Yoharatnam
senior lecturer-
Dept of Linguistics
& English university of Jaffna.


**பிரதம அதிதி**
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்,
ஆதீனகர்த்தா, பிரதம சிவாச்சாரியார்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்.

| திகதி | கிழமை | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 21.08.2023 | திங்கள் | 9.00-1.00 | ஆன்மீக நிகழ்வுகள் மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி. யாழ்.கிளை |
| 22.08.2023 | செவ்வாய் | 9.00-1.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வு. |
| 23.08.2023 | புதன் | 9.00-1.00 | ஆன்மீக நிகழ்வு தென்கயிலை உலக சமாதான ஆலயம். தலைப்பு:- யோகவாழ்வே நிறைவாழ்வு. திரு.ப.அச்சுதராஜா. யோகா ஆசிரியர் |
| 24.08.2023 | வியாழன் | 9.30-11.30 | ஆன்மீக நிகழ்வு. வாழும் கலை அமைப்பு. தலைப்பு:- ஆனந்த வாழ்விற்கான அறிமுகம். திருமதி.மேகலா குணசிங்கம் |
| 25.08.2023 | வெள்ளி | | நல்லை ஆதீன நிகழ்வு |
| 26.08.2023 | சனி | 9.00-1.00 | ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வு. |
| 27.08.2023 | ஞாயிறு | 9.00-11.00 | ஆட்டிசம் பற்றிய சமூக விழிப்புணர்வு நிகழ்வு. |
| | | 11.00-1.00 | சிறுதானிய உணவுப்பயன். விநியோகம் மற்றும் உணவு தயாரிக்கும் முறை. Dr.கௌரிபாலன் UK. |
| 28.08.2023 | திங்கள் | 9.00-1.00 | ஆன்மீக நிகழ்வு. பிரம்மகுமாரிகள். |
| 29.08.2023 | செவ்வாய் | 9.00-1.00 | ஆன்மீக நிகழ்வு. ஆஞ்சநேய சுவாமி வழிபாட்டின் மகிமை. சிவஸ்ரீ R.சுந்தரேஸ்வரக்குருக்கள் |

(C-7102)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீக் கிண்ண கால்பந்து போட்டி இன்டர்மியாமி அணி சம்பியன்



கிளப் அணிகளுக்கான லீக்ஸ் கிண்ண கால்பந்து போட்டியில் இன்டர்மியாமி அணி சம்பியன் ஆனது. அமெரிக்காவில் நடைபெற்று வந்த தொடரின் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் இன்டரமியாமி - நஷ்வில்லே அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் இன்டர் மியாமி தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் மெஸ்சி அசத்தல் கோல் அடித்தார். இதனால் இன்டர் மியாமி 1-0 என முன்னிலை பெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற 2 ஆவது பாதி ஆட்டத்தில் 57 ஆவது நிமிடத்தில் நஷ்வில்லே அணியின் பிக்கால்ட் கோல் அடித்தார்.

இதனால் 1-1 என சம நிலை ஆனது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் 1-1 என சமநிலையில் இருந்தது.

வெற்றியாளரை நிர்ணயிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. பெனால்டி ஷூட் அவுட் முறையில் 10-9 என்ற கணக்கில் இன்டெர்மியாமி அணி வெற்றி பெற்று இதனால் இன்டர்மியாமி சம்பியன் பட்டம் வென்றது. (6)

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த அல்காரஸ்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் அரையிறுதியில் உலகின் நம்பர் 1 வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ், போலந்து வீரர் ஹூபர்ட் ஹர்காக்சுடன் மோதினார்.

இதில் அல்காரஸ் முதல் செட்டை 2-6 என இழந்தார். இதையடுத்து சுதாரித்துக் கொண்ட அல்காரஸ் அடுத்த இரு செட்களை 7-6 (7-4), 6-3 என வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.(6)

# நியூசிலாந்தை வீழ்த்திய ஐக்கிய அரபு

டிம் சவுத்தி தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெட் அணி மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடுவதற்காக ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சென்றுள்ளது.

இரு அணிகள் இடையேயான முதல் இருபது-20 ஓவர் போட்டியில் நியூசிலாந்து 19 ரன்னில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் துபாயில் நேற்று முன்தினம் நடந்த 2 ஆவது போட்டியில் நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு எமிரேட்சிடம் அதிர்ச்சிகரமாக தோற்றது.

முதலில் விளையாடிய நியூசிலாந்து அணியால் 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 142 ரன்னே எடுக்க முடிந்தது. மார்க் ஷேப்மேன் அதிகபட்சமாக 46 பந்தில் 63 ரன் (3 பவுண்டரி, 3 சிக்சர்), எடுத்தார். அயன் அப்சல்கான் 3 விக்கெட்டும் முகமது ஜவாதுல்லா 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் ஆடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 15.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 144 ரன் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

கப்டன் முகமது வாசிம் 29 பந்தில் 55 ரன்னும் (4 பவுண்டரி, 3 சிக்சர்), ஆசிப் கான் 29 பந்தில் 48 ரன்னும் (5 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி நியூசிலாந்துக்கு பதிலடி கொடுத்தது.

3 போட்டிக் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2894

நித்தீஷ்

ஏன்டி டிரஸ் எடுக்க போகலையா...
உங்க கார்ட்டு குடுங்க எடுத்துட்டு வந்துடுறோம்.
மழை வர்ற மாதிரி இருக்கு மொட்ட மாடில
காய போட்ட துணிய எடுக்கலையானு
கேட்டேன் வெண்ண மகளே...



கவின்தன்

வர வர போன் யூஸ் பண்றதும்
போர் அடிக்குதே...
ஒரு வேளை திருந்திட்டு வாறோமோ..



வந்தீஷ்




எந்த ஒரு மனிதனும்
தன்னை ஒரு முறை
ஏமாற்றிய இடத்துக்கு
மீண்டும் போக மாட்டான்.
ஆனால் இன்னும்
பல மனிதர்கள்
தங்கள் மாமியார்
வீட்டுக்குச் செல்கின்றனர்.

கிஷாலி

எல்லா வீட்லேயும் ரெண்டு பிளாஸ்டிக் சேர் இருக்கும்.
உட்காரவா மாப்ள?
உட்காரவா? மடிக்காம துணிய போட்டு வைக்க மாமா



மாதங்கி

உயர்தரப் பரீட்சை முடிவுகள் சற்று முன்
இணையத் தளத்தில் வெளியானது.



கொஞ்சம் இருங்க. அப்பிடி என்று நியூஸ்
வந்தா எப்பிடி இருக்கும்.

ஹுதர்சி

காசு இருக்கிறப்போ ஒன்னுமே வாங்க
தோண மாட்டேங்குது...
காசே இல்லாதப்போ தான், காசு இருக்கிறப்பவே
அத வாங்கியிருக்கலாம்ன்னு தோணுது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் (யா/வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை) 175 ஆவது ஆண்டு நிறைவு விழா



யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் தனது 175 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

கி.பி 18 ஆம் நூற்றாண்டில் அந்நியராட்சியின் காலத்தில் சைவமும் தமிழும் நலிவடைந்து செல்வதைக் கண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவற்றை வளர்த்தெடுக்கும் நோக்கில் இப்பாடசாலையை 1848 ஆம் ஆண்டு ஆவணி 5 ஆம் நாள் (21.08. 1848) வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு முன்னால் உள்ள வீட்டில் "சைவப்பிரகாச வித்தியாசாலை" எனும் பெயரில் ஆரம்பித்தார். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக மதித்த நாவலர் பெருமான், தமது இறுதி மூச்சுவரை அவற்றின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். இவ் வித்தியாசாலையைத் தொடர்ந்து சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்ற வகையில் சில நல்லுள்ளங்களின் உதவியுடன் குறிப்பாக, திரு .அ.ஆறுமுக செட்டியார் வழங்கிய நிலத்தில் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்தார். 1850 ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாலயமானது, புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. இதுவே தற்போதைய வண்ணை நாவலர் மகா வித்தியாலயமாகும் .

நாவலர் பெருமான் அவர்கள் இவ்வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்பிப்பதும் சைவசமயிகளுக்கு பிரசங்கம் செய்தலிலும் தமது வாழ்நாள் முழுவதையும் போக்க வேண்டும் எனும் அவாவில் செயற்பட்டார்.

இப்பாடசாலையில் இருந்தே பிரசங்கங்களையும் சொற்பொழிவுகளையும் கூட்டங்களையும் நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் பாடசாலையில் சமயக்குரவர் நால்வர் ஆலயத்தை உருவாக்கி மாணவர்களுக்கு சைவசமய விழுமியங்களைப் போதித்து வந்தார்.

இவ்வாறு முப்பத்திரெண்டு வருடங்களாக இப்பாடசாலைக்கு நிர்வாகியாக, அதிபராக இருந்து செயற்பட்ட நாவலர் பெருமானின் இறுதிப்பேச்சு 1879 இல் எமது பாடசாலையில் நால்வர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரது குருபூசைத் தினத்தில் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும். நாவலர் பெருமானது மறைவிற்குப் பின்னரும் இப்பாடசாலையானது அவரால் உருவாக்கப்பட்ட சீட பரம்பரையினரால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இங்கு சைவமும் தமிழும் மட்டுமன்றி சமஸ்கிருத வகுப்புக்கள், திருமுறை வகுப்புக்கள் என்பனவும் நடத்தப்பட்டு வந்தன.

காலச் சுழற்சியில் 01.01.1961 இல் சைவப் பிரகாச வித்தியாசாலையானது கல்வி அதிபதியின் பரிபாலனத்திற்கு உட்படுத்தப்பட்டது. இதனால் 01.01.1966 இல் இருந்து யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்றது. இக்காலத்தில் தலைமை ஆசிரியராக பண்டிதர் வித்துவான் சைவப் புலவர்.இ.திருநாவுக்கரசு அவர்கள் கடமையாற்றியிருந்தார். அப்பொழுது 16 ஆசிரியர்களின் சேவையின் கீழ் 425 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இது யாழ். நகரில் புகழ் பூத்த கலவன் பாடசாலையாகத் திகழ்ந்து வந்தது குறிப்பிடத்தக் கதாகும். அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீக ரித்த சந்தர்ப்பத்தில் எமது பாடசாலையின் சொத்துக்களைப் பேணும் வகையிலும் நாவ லரின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நோக்கி லும் 1961 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்ம கர்த்தா சபை உருவாக்கப்பட்டது. இச்சபையினது தலைவராக வலயக்கல்விப் பணிப்பாளரும் பொருளாளராக பாடசாலை அதிபரும் வழிவழியாக இருந்து வருகின்றனர்.

இச்சபையானது பாடசாலையில் மாணவர்கள் சைவத்தைப் பேணவும் தமிழை வளர்க்கவும் ஏற்றவாறு பல சேவைகளை அன்று முதல் இன்றுவரை செய்து வருகின்றது.

அதன் ஓர் அங்கமாக எமது பாடசாலையை உருவாக்கி வளர்த்த நாவலர் பெருமானின் புகழ் மங்காத வகையில் அவரது உருவச்சிலை பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட்டது.

"தமிழிற்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை" என்ற பாரதிதாசன் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக தமிழை வளர்த்த நாவலரின் புகழை எடுத்துக்காட்ட வல்ல செயற்பாடாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

1948 இல் பாடசாலையின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் திரு. கனகரத்தினம் உபாத்தியாயர் எழுதிய ஆறுமுக நாவலர் சரித்திரம் வெளியிடப்பட்டது. இது காலத்தின் தேவை கருதிய செயற்பாடாக அமைந்தது. இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டிலும் இணைபாடவிதானச் செயற்



பாட்டிலும் சிறந்து விளங்கி தனது பெருமைகளை வெளியுலகிற்கு காட்டி வந்தது. இந்நிலையில் நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களினாலும் புலம் பெயர்வுகளினாலும் பாடசாலை சற்று தளர்வு பெற்று இருந்த போதிலும் 1996 இல் மீளக் குடியமர்ந்த போது நாவலர் பெருமான் அமைத்த பிரதான மண்டபம், நால்வர் கோயில் என்பன சேதமடைந்து காணப்பட்டன. அவை மீள் புனரமைப்பு செய்யப்பட்டன. நால்வர் கோயிலுக்கான கும்பாபிஷேகம் 1998.04.03 இல் நடைபெற்றது. இங்கு நால்வர் குருபூஜை,ஆறுமுக நாவலர் குருபூஜை, சேக்கிழார் குருபூஜை என்பன சிறப்பாக நடைபெறுவதோடு குறித்த விசேட தினங்களில் மாணவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையில் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக 2001 ஆண்டில் அப்போது அதிபராக இருந்த திரு.ந.சிவராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன் சிறப்பை வெளிப்படுத்த 150 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியிடப்பட்டது.

பாடசாலையின் புகழை மென்மேலும் உயர்த்தும் வகையில் ஒவ்வொரு செயற்பாடும் அமைந்திருந்தது. ஆரம்ப காலத்தில் நடத்தப்பட்டு வந்த தமிழ், சமய வகுப்புக்கள் புலம்பெயர்வினால் தடைப்பட்ட போதிலும் மீண்டும் சகலரினதும் ஒன்றிணைந்த முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது.அதன் தொடர்ச்சியாக இன்றும் சைவப் புலவர்கள், இளம் சைவப்புலவர்களுக்கான வகுப்புக்கள், பால பண்டிதர் வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள், அறநெறி வகுப்புக்கள் என்பன பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட எமது பாடசாலையின் 175 ஆவது ஆண்டு விழாவின் ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 200 ஆவது ஆண்டு ஜனன தின நிகழ்வும் 14.12.2022 அன்று தற்போது அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு.க.கலியுகன் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அத்தோடு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபையின் முழு நிதிப் பங்களிப்புடன் நாவலர் வீதி நுழைவாயிலில் அமைக்கப்பட்ட பாடசாலையின் முன் வளைவானது முன்னாள் அதிபர் திரு. இ. இரவிச்சந்திரன் அவர்களின் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.மு.இராதாகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இங்கு அமைந்துள்ள நால்வர்களுக்கான ஆலயம் நீண்டகால இடைவெளியின் பின் மீள் திருத்தம் செய்யப்பட்டு 07.06.2023 அன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

இலங்கையில் நால்வர்களுக்கென தனியான ஆலயம் அமைந்துள்ள பெருமை எமது பாடசாலையையே சாரும். இக்கோயிலுக்கு காங்கேசன் துறை வீதியில் புதிதாக வாயில் அமைக்கப்பட்டு அதில் நால்வர்கள் அற்புதங்களை வெளிப்படுத்தும் சிற்பங்கள் கொண்ட வளைவு ஒன்றும் பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.




இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் சைவசமய எழுச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்து வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபையினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரது முயற்சிகளின் பயனாக இப்பாடசாலை சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. .மாணவர்களின் பெறுபேறுகளும் பாடசாலை நிகழ்வுகளும் இதற்குச் சான்றாகும். இன்று 175 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் எமது பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சியுற்று நாவலர் பெருமானுக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் என்பது திண்ணம்.

வாழ்க சைவம்! வளர்க தமிழ்!

பாடசாலைச் சமூகம்,
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபை,
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் அதிகரிக்கும் திருட்டுக்கள்
## எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்ற திருட்டுக்கள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அண்மைக் காலமாக பகல் மற்றும் இரவு வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான உடைமைகள் களவு போவதாக பெருமளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

எனவே பொதுமக்கள் தங்களின் பெறுமதியான உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதுடன் வீட்டை, விட்டு வெளியேறும் போது கதவு மற்றும் ஜன்னலை பாதுகாப்பாக பூட்டி விட்டுச் செல்வதுடன் அருகில் உள்ள நம்பிக்கையான ஒருவருக்கு தெரியப்படுத்திவிட்டு செல்வது சிறந்தது.

அத்துடன் தங்களின் பிரதேசத்தில் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதுடன், சந்தேகத்திற்கிடமான வாகன இலக்கங்களை குறித்து வைப்பதும் களவுகளை தடுப்பதற்கு வசதியாக அமையும்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய எல்லைக்குள் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெறும் பட்சத்தில் 021 227 0722 என்ற பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் மேலும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் களவுகள் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸாரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-30)



யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விருந்தினர் காத்திருப்பு மண்டபம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறைச்சாலை உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:-சிவசாந்தன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 22 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு திருமுறை அரங்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது இ.திருஞான சம்பந்தன் ஓதுவார் பாட்டு பாடவுள்ளதுடன் சி.நிரோசினியும் பாடவுள்ளார். அத்துடன் வயலின்- ஈ.வனஜாவும் ஹார்மோனியம்- ந.செல்வச்சந்திரனும் மிருதங்கம்-சிவ.சக்திதரனும் கஞ்சிரா-ம.லோகேந்திரனும் இசை க்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.25 மணிக்கு நடைபெறவுள்ள திருமுறை அரங்கில் ஸ்ரீ நாகபூசணி அரங்கராஜ் பாட்டு பாடவுள்ளதுடன் வயலின்-ஈ.வனஜாவும் மிருதங்கம்-ம.லோகேந்திரனும் முகர்சிங்-சிவ.சக்திவேலும் இசைக்கவுள்ளனர். (4)

# இலவச உர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரம் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் கீரிமலை கமநல சேவை நிலையத்தில் வைத்து இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது என அளவெட்டி தெற்கு கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (4)

# கசிப்பு போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது

(அராலி)

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி-6-33-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 450 | 400 |
| தக்காளி | 180 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| கோவா | 300 | 200 | 250 | 300 |
| கரட் | 350 | 450 | 450 | 500 |
| பூசணி | 80 | 120 | 100 | 120 |
| புடோல் | 80 | 80 | 120 | 160 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 180 | 180 |
| பாகற்காய் | 400 | 350 | 400 | 300 |
| வெண்டக்காய் | 100 | 70 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 160 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 400 | 250 |
| போஞ்சி | 450 | 500 | 450 | 550 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 70 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 |

# இராசிபலன்

21.08.2023
ஆவணி 04, திங்கட்கிழமை
பஞ்சமி முன்னிரவு 11.04 மணிவரை
சித்திரை பின்னிரவு 4.29 மணிவரை

சுபநேரம்-12.05-1.35 மணிவரை
இராகுகாலம்-7.35-9.05 மணிவரை
சித்தாமிர்தம், கருட பஞ்சம்

சந்திராஷ்டமம்-
உத்திரட்டாதி.

வளவன்

**மேஷம்**
கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு, வழிபாடு மகத்துவம் தரும்.

**கடகம்**
உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்**
மன அமைதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் வந்து சேரலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மகரம்**
பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பகையொன்று நட்பாகலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.

**ரிஷபம்**
எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
செய்தொழில் மேன்மையுண்டு, வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, பொன்னான நாள், சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து நடப்பர், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**மிதுனம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி**
குடும்பத்தினர் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

கடன் கொடுத்தவனுக்கு கடனாளி ஒரு சேவகர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு போரை தமிழர்கள் விரும்பவில்லை

## இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனதார விரும்பினால் விரைந்து அரசியல் தீர்வு காண முடியும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


நாட்டில் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் திடீரென அதிகரித்துள்ளன.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கைக் குறி வைத்து பௌத்த சிங்களப் பேரினவாதத் தரப்பினர் வன்முறைகளைத் தூண்டும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

நாம் மீண்டும் ஒரு வன் முறையை, மீண்டும் ஒரு போரை விரும்பவில்லை.

நாம் சகல உரிமைகளுடன் நிம்மதியாக வாழவே விரும்புகின்றோம்.

இந்த நிலைமை ஏற்பட வேண்டுமெனில் விரைந்து அரசியல் தீர்வு காண வேண்டும்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனதார விரும்பினால் இந்தக் கருமத்தை நிறைவேற்ற முடியும்" என அவர் தெரிவித்தார். (நி)

# தமிழர்களின் வாக்குகளை பெறவே ஜனாதிபதி ரணில் நாடகமாடுகிறார்

## கஜேந்திரகுமார் எம்.பி சாடல்

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போலியான நாடகங்களை முன்னெடுத்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு அவர் முன்வரவில்லை.

இவ்வாறான நிலையில் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாத மாகாண குழுவொன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி தனக்கு சார்பானவர்களை இணைத்துக் கொள்வதற்காகவே மாகாண சபை குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (நி)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி


(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான வானிலை காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.


இதனால் தமக்கான வருமானம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தேயிலை செய்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வறட்சி காரணமாக, தேயிலை அறுவடை 18 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தம்மிக மஹீபால தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வறட்சியான வானிலையுடன் தேயிலை உற்பத்தியை பாதுகாப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (நி)

**உலகைக் காக்கும் இறைவனாகவும் அடியார்களின் துயரங்கள் நீக்கும்
நல்லைக் கந்தனை பிறவிக் கடலை நீக்கும் நல்லைக் குமரனை ஆசாரசீலராக
அமைதியாக வணங்குவோம் 'ஓம்சரவணபவ' வழிபடுவோம் "ஓம்நமசிவாய"**





**முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்லபெருமான் அவுணர் குல மடங்கப்
பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகழ்பவரே
கந்தர் அலங்காரம்.**

உலகைக் காக்கும் தெய்வம் முருகன் எனும் சான்றாக "உலகெங்குமேவிய தேவா- லயந்தோறு பெருமானே" என சேஷத்திரக் கோவை திருப்புகழில் அருணகிரிநாதர் பாடினார். முருகன் சந்நிதி முன் நின்று "ஞானேந்திரியமாகிய வாய்" முழு மனத்துடன் எம்பெருமானை திருப்புகழ், அநுபூதி ஓதி வணங்கினால் மீண்டும் துயர் மிக்க பிறவி வராது.

இவ்வுலகில் மனிதர்கள் பிறந்து, வாழ்ந்து பின்னர் மாய்ந்து விடுகிறார்கள். இறந்த பின்னர் மீண்டும் இந்தப் பூமியில் பிறக்கிறார்கள். திருவாசகத்தேனில் மாணிக்கவாசகர்

**"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல் விரகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"**

என உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் ஏழு ஜென்மங்கள் உள்ளன. பிறந்து, இளைத்தேன் என மணிவாசகர்

**"மா ஏழ் சனனம் கெட மாயைவிடா
மூ ஏடனை என்று முடிந்திடுமோ!
கோவே! குறமின் கொடி தோள் புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே!"**
என கந்தர் அநுபூதி
**"ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பு தெக்காலம்?"**

பிறப்புக்களினால் அவதிப்படும் எம்மனம் **தண்டை,கிண்கிணி, சதங்கை, சிலம்பு** இவை ஒலிக்கின்ற எம்பெருமானுடைய அழகான செக்கச் சிவந்த தாமரை போன்ற இணையடிகளை நாடி வந்து எம் துக்கத்தை நீக்கி அழிவில்லா மகிழ்ச்சி அடைய நல்லைக் கந்தனை, பூரண சரணாகதி அடைந்து பிரார்த்திப்போமாக!.

பிறப்பு, இறப்பு எனும் கடும் சோதனையிலிருந்து விடுதலை பெற, வீடுபேறு எனும் தேனினை சொரிந்திடும் முருகனின் பத்ம பாதங்களை புகலிடமாகக் கருதி கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருப்புகழ், திருவாசகங்களையும் பாடி வழிபடும் போது நிரந்தரமானதோர் பேரானந்த நிலையை அடைவோம்.

"ஓம் முருகா"

**நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெருமானை செம்பொன் னம்பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
பொற்சபையின் ஆனந்த நடனமிடும் நடன சபாபதியை
பரமசிவனை மனமே! சதா தியானித்துக் கொண்டிரு**

**ஈசன் யாவும் அறிந்தவன் என்பதும்
யாவினும் செம்மை நிலவுமாறு செய்பவர் என்பதும்
மெய்த்தொண்டர்களை தீய
நெறியில் செல்லாது திருத்தி
ஈசன் ஆட்கொள்ளும் கருணையை
ஆலயத்திலும் இல்லத்திலும்
திருமுறை ஓதுதல் ஆகும்
திருநாவுக்கரசர் வாக்கு**

**மானிடம் செழிக்க மாதிருப்புகழ் பொழிந்த
அருணகிரிநாதர் திருவடிகளையும்
மானிடம் செழிக்க மா திருவாசகத்தேன் பொழிந்த
மாணிக்கவாசகர் திருவடிகளையும்
வணங்குவோம்.**



ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர்
மடாலய போசகர் க.கு.க.சிவபாலன் (K.K.K)

21.08.2023 (C-7099)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் மோதியது ரஷ்யாவின் விண்கலம்

**(மொஸ்கோ) ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் நிலவில் மோதியதாக ரஷ்யா விண் வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

நிலவின் தென்துருவத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக ரஷ்யா, லூனா-25 என்ற விண்கலத்தை கடந்த 10 ஆம் திகதி விண்ணில் செலுத்தியது.

இந்தியாவின் சந்திராயன்-3 விண்கலத்துக்கு போட்டியாக ரஷ்ய விண்கலம் அனுப்பப்பட்டது. சந்திராயன்-3 விண்கலம் நர்ளை மறு தினம் நிலவில் தரை இறங்க திட்டமிட்டுள்ள நிலையில் அதற்கு முன்பாக இன்று லூனா-25 விண்கலத்தை நிலவில் தரையிறக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.

சுமார் 47 ஆண்டுகளுக்கு பிறகு நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய லூனா-25 விண்கலம் கடந்த 17 ஆம் திகதி வெற்றிகரமாக நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்தது.

இதையடுத்து அதன் சுற்றுப்பாதையை குறைக்கும் பணிகள் நடைபெற்றன. அதன்படி லூனா-25 விண்கலத்தின் உயர குறைப்புகளை விஞ்ஞானிகள் செய்து வந்தனர்.


லூனா-25 விண்கலத்தில் திடீரென்று தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. நிலவில் தரையிறக்குவதற்கு முந்தைய சுற்றுவட்டப் பாதையில் விண்கலத்தை செலுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனால் இறுதிக்கட்ட சுற்றுப்பாதையை குறைப்பதில் பின்னடைவு ஏற்பட்டதால் விண்கலத்தை திட்டமிட்டபடி அடுத்த சுற்றுப்பாதைக்கு அனுப்ப முடியவில்லை. தற்போதைய பாதையிலேயே ரஷ்ய விண்கலம் சுற்றி வந்தது. இந்நிலையில், ரஷ்யாவின் லூனா 25 விண்கலம் நிலவில் மோதியதாக ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

லூனா-25 விண்கலத்துடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த ரஷ்ய விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. (நி)

# தேர்தல் நடைபெற்றால் 3 ஆவது முறையாக மோடி ஆட்சி

## கருத்துக் கணிப்பில் தகவல்



(டில்லி)

இந்தியாவில் தேர்தல் நடைபெற்றால் பிரதமர் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வருவார் என்று டைம்ஸ் நவ் - இடிஜி கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

இதன்படி ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவி வகிக்கும் முதல் பிரதமர் என்ற பெருமையை மோடி பெறுவார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 15 ஆம் திகதி தனது சுதந்திர தின உரையில் வரும் 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு தான் மீண்டும் ஆட்சிக்கு வருவேன் என நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் விமர்சனங்கள் எழுந்தன. இந்நிலையில் இந்தக் கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளது. (நி)

# பாரிஸில் தீ விபத்து மூவர் உயிரிழப்பு



(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தமிழர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் வசிக்கின்ற ஈல்-சென்-துனியில் நேற்று முன்தினம் தொடர்மாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிறுமி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

பதினொரு அடுக்குகள் கொண்ட கட்டடத்தின் ஒன்பதாவது தளத்தில் காலை பத்து மணி அளவில் தீ பரவத் தொடங்கியது. 195 தீயணைப்பு வீரர்கள், அறுபது வண்டி வாகனங்கள் சகிதம் தீயை அணைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டனர். 13 வயதுச் சிறுமி ஒருத்தி உட்பட மூன்று பேரே இந்தத் அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர். (நி)

# தாய்வான் வான்வெளியில் நுழைந்த 42 சீன போர் விமானங்களால் பரபரப்பு

(தாய்வான்)

தாய்வான் வான்வெளி பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்து போர் பயிற்சியில் ஈடுபட்ட 42 சீன போர் விமானங்களினால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தாய்வான் நாட்டை தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிராந்திய பகுதியாக சீனா கூறி வரும் நிலையில், தனி சுதந்திர நாடாக அது செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில், தாய்வானை சுற்றியுள்ள பகுதிகளில் சீனா தனது வான் மற்றும் கடல்வழி ரோந்து பணிகள் மற்றும் இராணுவ பயிற்சிகளை தொடங்கியுள்ள நிலையில் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தாய்வான் நாட்டின் வான்வெளி பர்துகாப்பு மண்டலத்திற்குள் சீனா பயிற்சியில் ஈடுபட்டுள்ளமைக்கு தாய்வான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், தாய்வானிற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவு கரம் நீட்டியுள்ளதுடன், இதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (நி)




## கொடியேறி வருவாயப்பா

பல்லவி

என் தெய்வமே என் வேலவா
கொடியேறி எமைப் பார்க்க வருவாயப்பா

அனுபல்லவி

முப்பது முக்கோடி தேவர்கள் சூழ- உன்
கொடியேற்றம் நல்லூரின் பெருமையப்பா

சரணம்

கோடான கோடி மக்களுக்குள்- நீ
கொடியேறும் காட்சி சொர்க்கமையா
தேவர்கள் மக்கள் பின் தொடர -நீ
மயிலேறி வரும் காட்சி எப்படிச் சொல்வேனப்பா

சரணம்

நல்லூர் வீதியெல்லாம் ஒளி வீசும்-உனை
நாடி வரும் கூட்டமோ அலை மோதும்
நடக்காமல் நடந்து மோதும் அன்பர் கூட்டம்-உன்
கண்ணோடு ஒன்றிணைய தாவி வருகுதையா.

மலர் சின்னையா,
முன்னாள் அதிபர்,கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை

## கொடியேற்றம் கண்டிடுவோம்!


வள்ளி தெய்வானை மணவாளன்!
வேற்குமரன் கோவிலிலே கொடியேற்றம்!
அள்ளி அருள் பொழிந்திடவே முருகனவன்
எழுந்துவரும் சேவல் கொடியேற்றம்!
வள்ளலவன் சூரசங் காரனவன்!
வளர் நல்லைக் கோவிலிலே கொடியேற்றம்!
உள்ளமது நிறைந்திடவே பக்தியுடன்
உமைபாலன் கொடியேற்றம் கண்டிடுவோம்!

நாயன்மார்க்கட்டு ப. மகேந்திரதாசன்.

## நல்லூரில் சரவணனின் கொடியேற்றம்

ஆலயத்தைக் கோபுரங்கள் ஓங்கிநின்று அழகூட்ட
ஆறுமுகன் நல்லூரில் அருளளிக்க
சீலமுடன் இந்துக்கள் காந்தமுடன் சேர்ந்திடுவர்
சரவணனின் கொடியேற்றம் காண்பதற்கு
மேளங்கள் மந்திரங்கள்
மண்டபத்துள் ஒலித்திருக்க
மங்கையரும் ஆடவரும் வேண்டிடுவர்
வேலவனின் திருவருளால் வேதனைகள் வாடிடவும்
விரும்பும் நிம்மதி கிடைத்திடவும்.

குளப்பிட்டி,க.அருமைநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சி வகைகளை உண்ணும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

வறட்சியான காலநிலையில் கால்நடைகளின் இறைச்சியை உண்பதில மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலை காரணமாக காட்டுப் பகுதிகளில் இருந்து உணவு மற்றும் நீர் நிலைகளைத் தேடி கால் நடைகள் வருவதால் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சிலர் விஷம் கலந்த உணவுகளை கொடுத்து விலங்குகளை வேட்டையாடுவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹனசுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான இறைச்சியை உண்பதால் மனிதர்களுக்கு உயிராபத்து ஏற்படும்என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பரந்தனில் பெருமளவான வெடிபொருட்கள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சியில் தனியார் காணியின் கிணற்றிலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் கிணறு சுத்தம் செய்யும் வேளையில் ஆயுதங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து நேற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது பழைய பி.கே.எல்.எம்.ஜி. மற்றும் ஏகே தோட்டாக்கள் 60, செல் 5, டிக்னெட்கள் சாஜர்கள், பழைய இலத்திரனியல் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (நி-6-100-316)

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயார்


## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

வைத்தியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக வைத்தியர்களை அச்சுறுத்தவே சுகாதார அமைச்சு முயற்சித்து வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சு உடனடி தீர்வினை வழங்காவிடின் எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், வேறு வகையா்ன தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு வைத்தியர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில் யாழ்.ஏ9 வீதியில் இருந்து செம்மணி வீதி ஆரம்பிக்கும் நல்லூர் வரவேற்பு வளைவில் சேவல்கொடி கட்டும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# உண்ணாப்பிலவில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு பகுதியில் அமைக்கப்பட்ட மதுபானசாலைக்கு பொது மக்கள், பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உண்ணாப்பிலவு பகுதியில் புதிதாக சில்லறை மதுபான சாலை நிலையம் ஒன்று கடந்த 15ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த கிராம மக்கள், பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து பிரதேச செயலாளருக்கு அதனை அகற்றி தருமாறு கோரி கடிதம் ஒன்றினை கடந்த 16ஆம் திகதி வழங்கியுள்ளார்கள்.

கடிதம் வழங்கப்பட்டு இது வரையில் குறித்த மதுபான சாலையை அகற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குறித்த கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதுபானசாலை அமையப்பெறும் இடத்திற்கு 100மீற்றர் தூரத்திற்கு உட்பட்ட பகுதியில் பாடசாலைகள், தேவாலயங்கள், ஆலயங்கள் இருக்கக் கூடாது என்பது விதிமுறையாக இருக்கின்ற போதும் குறித்த இடத்திலிருக்கும் மக்களிடம் அபிப்பிராயம் கேட்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-299)



புதுக்குடியிருப்பில் மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீடும் நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-சதீஸ்)


# பெறுகை அறிவித்தல் சபை நிதி -2023

**கணனி தொகுதி கொள்வனவு செய்தல், கேள்வி இல:NP/14/41(3)/3/PO/Computer/2023**

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கொள்வனவிற்காக கோரப்படுகின்றது.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் பதிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி தொலைபேசி- 021 227 0498, தொலைநகல் -021 227 0079, மின்னஞ்சல்-chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **21.08.2023** ஆம் திகதியிலிருந்து **04.09.2023** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் **மு.ப 9.00** மணி முதல் **14.00** மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து **21.08.2023** ஆம் திகதியிலிருந்து **04.09.2023** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணிக்கும் **14,00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2,000** (வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. கேள்வி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு **04.09.2023** ஆம் திகதி பிற்பகல் **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

7. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 23.10.2023)நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

8. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.

9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| Np/14/41(3)/3/Po/Computer/2023 | கணனி. தொகுதிகள் வழங்கல் | 0.75 | 02 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 7500.00 | 20.11.2023 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 29.08 2023 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

21.08.2023

தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம்,சாவகச்சேரி. (சி-7098)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# 'சிறுநீரக கற்களை கரைக்கும் மூலிகைகள்'



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சிறுநீரகம் முக்கிய கழிவகற்றும் உறுப்பாகும். பல்வேறு வகையான உப்புக்கள் படிவதாலும் சிறுநீரகம் சீராக தொழிற்பட முடியாது போகின்றது. சிறுநீரகக் கற்கள் மட்டும் பல்வேறு வகையாக இருந்தாலும் இடுப்புவலி, அடிவயிறு மட்டும் வலி தாங்கொணா வலியைக் கொடுக்கும். சிலருக்கு வாந்தி, சிறுநீர் சொட்டு சொட்டாக போதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறல், நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் போன்ற குணங்களில் ஒன்றோ பலவோ ஏற்படலாம்.



வெறும் வயிற்றில் காலையில் 1 லீற்றர் நீர் அருந்த வேண்டும். 200 மில்லி தண்ணீரில் 5 தேக்கரண்டி பெருஞ்சீரகத்தை ஊற வைத்து அருந்தலாம். வலி தாங்க முடியாமல் இருந்தால் ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு பனிக்கட்டிகளை போட்டு இரண்டு கால்களையும் அதனுள் அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும். சுடுநீர், குளிர்ந்த நீரால் அடிவயிற்றில் மாறி மாறி ஒத்தடம் கொடுக்க வேண்டும் வலி குறையும்.

சிறுநீரகக் கற்கள் தொடர்ந்து இருக்கும் போது உயிரணுக்கள் குறையும். தேக பலமும் குறையும். உடலின் உஷ்ணத் தன்மை அதிகரிக்கும். எலுமிச்சம்பழச் சாறு - 30 மில்லி, மிளகு-9, சின்ன வெங்காயம்-1, தேன் -60 மில்லி 200 மில்லி நீர்

மிளகு பொடித்து வெங்காய



த்தை அரிந்து மிளகுடன் சேர்த்து அரைத்து பழச்சாறு தேனுடன் கலந்து 200 மில்லி நீரில் கலந்து வெறும் வயிற்றில் காலையில் அருந்த வேண்டும். இப்படி தொடர்ந்து 7 நாட்கள் எடுத்து வர வேண்டும்.

சதைகரைச்சான் மூலிகையும் சிறுநீரக கற்களுக்கு சிறந்தது. இதன் முட்களையும் தோலையும் சீவி உள்ளிருக்கும் ஜெல் போன்ற பகுதியில் தினமும் 10 கிராம் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வர சிறு

சீரக கற்கள் கரையும்.

இரணகள்ளி, சிறுகண் பீழை / தேங்காய்ப்பூக்கீரை, சிறுநெருஞ்சில், பூனைமீசை/ சீரகதுளசி, முக்கரட்டை செடி எல்லாம் சம அளவு எடுத்து 1 லீற்றர் நீர் விட்டு 1/4 லீற்றராக வற்றக் காய்ச்சி வெறும் வயிற்றில் காலையில் தொடர்ச்சியாக 3 நாட்கள் எடுத்து வர சிறுநீரக கற்கள் கரையும்

சிறுகண் பீழையை வேருடன் சேகரித்து கழுவி சிறு துண்டுகளாக நறுக்கி கல்வத்தில் இட்டு சர்க்கரை சேர்த்து மை போல அரைத்து பசுவின் பாலில் சேர்த்து கலந்து சிறு கண்பீழை பால் 50 மில்லி தொடக்கம் 100 மில்லி வரை காலை, மாலை 10-15 நாட்களுக்கு கொடுக்கலாம்.

சிறுநெருஞ்சில் சம்மூலம் -1 கைப்பிடி, சிறுகண்பிழை- 1கைப்பிடி, முள்ளங்கி -1 மூன்றையும் சேர்த்து குடிநீர் காய்ச்சி 20-100 மில்லி தினமும் காலையில் தொடர்ந்து 7 நாட்கள் எடுத்து வர வேண்டும். சிறுநீரகக் கற்கள் பல்வேறு வடிவங்களில் இருந்தாலும் சிறுகண்பீழையின் பூக்களும் சிறு நெருஞ்சலின் முட்களும் கற்களின் அமைப்பில் இருப்பது சிறுநீரக கற்களுக்கு அம்மூலிகைகள் சிறந்தன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

வாழைத்தண்டுச்சாறு- 800 மில்லி - 1 லீற்றர் வரை குடித்து வர கல்லடைப்பு நீங்கும். மாவிலங்கம் பட்டையை இடித்து குடிநீர் காய்ச்சி 50- 100 மில்லி தினமும் காலை, மாலை எடுத்து வந்தாலும் சிறுநீரக கற்கள் கரையும். எலுமிச்சம், துளசி, பெருஞ்சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து பொடித்து 4 கிராம் அளவு காலை, மாலை வெந் நீரில் எடுக்க சிறுநீரகக் கற்கள் கரையும்.

சப்பாத்தி கள்ளியை / நாக



தாளியை எடுத்து வந்து அதன் மேலுள்ள முள், தோல் இவைகளை நீக்கி பொடியாக நறுக்கி சிறிதளவு மிளகை தூள் செய்து போட்டு நன்றாகக் கலந்து காலை, மாலை 2 தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தாலும் சிறுநீரக கற்கள் கரையும்.

வேருடன் கூடிய சிறுநெருஞ்சிலை சேகரித்து இடித்து பிழிந்த சாறு 1/ 2 லீற்றர் நல்ல தூய தேன் 350 மில்லி, சீனி 500 கிராம் ஒன்று சேர்த்து பழைய மண் பானையில் போட்டு அடுப்பேற்றி எரித்து பதத்தில் வடித்து பழசர்பத் போல தினமும் சாப்பிட்டு வந்தால் கல்லடைப்பு நீங்கும். நெருஞ்சில் செடியின் சாறு4 தேக்கரண்டி அளவு



மோரில் கலந்து 7நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தாலும் சிறுநீரக கற்கள் படிப்படியாக கரையும்.

சிறுநீரக கற்கள் இருக்கும் போது சிறுநீருடன் இரத்தம் வெளியேறும் நிலை இருக்கும் போது கீழா நெல்லி சாறு 60 மில்லி, கறந்த பசுவின் பாலில் கலந்து சாப்பிட்டு வர மேற்படி நிலை குறையும்.

பொட்டாசியம், சோடியம், பொஸ்பரஸ் குறைவான உணவுகளாக எடுக்க வேண்டும். தக்காளி, கத்தரி, முற்றிய முருங்கைக்காய், கருவாடு போன்றவற்றை இயலுமாணவரை தவிர்க்க வேண்டும்.

வெங்காயம் , உள்ளி, கோவா, கோழிபிளவர், அன்னாசி முள்ளங்கி, திராட்சைபழம் போன்றவை தாராளமாக எடுக்கலாம்.

சிறுரக கற்களுக்கு பீன்ஸ்சும் சிறந்த மூலிகையாகும் . சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் முள்ளங்கி சூப், பீன்ஸ் சூப், வாழைத்தண்டு சூப் முதலியன தயாரித்து பயன்படுத்தலாம்.

### முள்ளங்கி சூப்

முள்ளங்கி, இஞ்சி, கொத்தமல்லி இலை, மோர் அளவாக எடுத்து ஒன்று சேர்த்து மிக்ஸ்ஸியில் அடித்து வடித்து அளவாக உப்பு, தேசிப்புளி சேரத்து பருகலாம்

### வாஸ்ழத்தண்டு சூப்

சின்ன வெங்காயம், இஞ்சி, உள்ளி, சின்னச்சீரகம், மஞ்சள், தூள், மிளகு, தக்காளி, கறிவேப்பிலை, நார் நீக்கி வாழைத்தண்டு சிறிதளவு நல்லெண்ணெய்யில் வதக்க வேண்டியவற்றை வதக்கி வாழைத் தண்டுச்சாறு சேர்த்து கொதிப்பித்து சூப்பாகப் பருகலாம்,

பூனை மீசை/சீரகதுளசி இலைகளை சேகரித்து அடித்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து ஒரு லீற்றர் நீரில் போட்டு குடிநீர் காய்ச்சி 250 மில்லியாக வற்ற வைத்து காலை, மாலை எடுக்க சிறுநீரக கற்களை கரைத்து சிறுநீரையும் அதிகளவில் வெளி யேற்றும்.

சிறுநீரக கற்கள் இருப்பவர்கள் மூக்கிரட்டை வேர், வெள்ளைச்சாரணை வேர் இரண்டையும் சம அளவில் எடுத்து சிதைத்து ஒரு மண்சட்டியில் போட்டு நான்கு பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 50 மில்லி அளவு காலை, மாலை 21 நாட்கள் தொடர்ந்து எடுத்து வர சிறுநீரக கற்கள் கரையும். சித்தமருத்துவத்தின் படி சிறுநீரகக்கற்கள் உருவாகி உடலின் அதிகரித்த உஷ்ணம் முக்கிய காரணமாகிறது.

இதன் அடிப்படையிலேயே நீர் முக்கியமாக அருந்த வேண்



டும். கற்கள் இருப்பவர்கள் இரவில் கண் விழிக்கும் போது கூட நீர் அருந்துதல் சிறந்ததாகும். அத்துடன் முள்ளங்கியை பச்சையாக உண்ணலாம்.

வெள்ளை, சிவப்பு முள்ளங்கி இரண்டையும் பயன்படுத்தலாம். Oxalate content கூடிய உணவுகளை கட்டுப்படுத்த வேண்டும். உப்பு கூடுதலாக எடுப்பதை தவிர்க்க வேண்டும். மாதுளம்பழச்சாறு, எலுமிச்சை பழச்சாறு, செவ்விளநீர், பச்சை இளநீர் போன்றவை தாராளமாக எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023



**வெற்றி ஒன்றையே குறிக் கோளாகக் கொண்ட சிம்ம இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் இணைந்து கூட்டுக் கிரகயோகத்தை உருவாக்கு கிறார்கள். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவது யோகம். எனவே, திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறும். தன்னம்பிக்கை துளிர் விடும். தனித்து இயங்குபவர்கள் பொரு ளாதார முன்னேற்றம் காண்பர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்தி ணைவர். தொழிலில் புதிய ஒப்பந்த ங்கள் வந்துசேரும்.

### கடக - சுக்ரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். தொழில் ஸ்தானாதிபதியான சுக்கிரன், விரய ஸ்தானத்தில் சஞ்சரிக் கும்போது தொழில் மாற்றம் மற்றும் உத்தியோக மாற்றம் ஏற்பட வாய்ப்பு அதிகம். வாடகைக் கட்டடத்தில் இய ங்கிய தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டு வீர்கள்.

பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதிய பங்குதாரர்களை சேர்த் துக்கொள்ள முன்வருவீர்கள். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட மாறுதல்கள் கிடைக்கும். ஒருசிலருக்கு ஊதிய உயர்வின் காரணமாக குடும் பத்தை விட்டு பிரிந்து, வேறு இடத்தில் வேலை பார்க்கும் சூழ்நிலை ஏற்படும்.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், தனஸ்தான த்திற்கு வரும் போது பொருளாதாரம் விருத்தியாகும். இடம் வாங்குதல், வீடு வாங்குதல், மனை கட்டிக் குடியேறும் அமைப்பு போன்றவற்றிற்கு அடித்தளம் அமையும் நேரம் இது. தன ஸ்தானத் தில் செவ்வாய் உலா வரும் போது, பூமி விற்பனையாலும், பங்குச் சந்தையாலும் இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் சகோதர வழி சச்சரவுகள் மாறி பாகப்பிரிவினைக்கு வழிபிறக்கும்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல் கிறார். வாக்கிய கணித ரீதியாக வரும்





இந்த மாற்றம் உங்களுக்கு நன்மை களைக் கொடுக்கும். கண்டகச் சனியில் இருந்து விடுபடுவதால் கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறும். இடம், பூமி சேர்க்கை, இல்லத்தில் சுப காரியங்கள், தொழில் முன்னேற்றங்கள், உத்தியோகத்தில் சம்பள உயர்வு போன்றவை திருப்திகரமாக அமையும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளும், செல் வாக்கும் அதிகரிக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு தடைப்பட்ட காரியங்களை தகுந்த விதத்தில் செய்து முடிப்பீர்கள்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவ ர்த்தியாகிறார். உங்கள் ராசிக்குத் தன - லாபாதிபதியான புதன் வக்கிர நிவர் த்தியாவது யோகம்தான். பொருளா தாரத்தில் உச்ச நிலையை அடை வீர்கள். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வியாபாரப் போட்டிஅகலும். தொழில் வெற்றிநடைபோடும். எதிர் காலத்தைப் பற்றிய பயம் அகலும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து வந்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் தானாக வந்துசேரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொன்னான நேரம் இது. தொழில் செய்பவர்கள் விரும்பியபடியே லாப த்தை அடைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவி கிடை க்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்ப ந்தங்கள் வந்துசேரும். மாணவ - மாணவிகள் மகத்தான பலனைப் பெறுவர். பெண்களுக்கு கொடுக்கல்- வாங்கல் சரளமாகும். சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் இடத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

## எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நல்லதையே சிந்தித்துக் கொண்டிருக்கும் கன்னி ராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அவரோடு சுக்கிரன் இணைந்து புத சுக்ர யோகத்தை உருவாக்குகிறார். குருவின் பார்வை உங்கள் இராசி நாதன் மீது பதிகிறது. இந்த அமை ப்பு விரய ஸ்தானத்தில் இருப்பதால், அதிக விரயங்களைச் சந்திக்கும் மாதமாக இது இருக்கும். ஆயினும் குரு பார்வையின் காரணமாக அவை அனைத்தும் சுப விரய ங்களாகவே அமையும்.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கி ரன், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைவீர்கள். நினை த்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலும். தொழில் வெற்றி நடை போடும். எதிரிகளின் தொல்லை குறையும். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் வரலாம். வாகன யோகம் உண்டு. பணி புரியும் இடத்தில் உங்கள் கருத்து க்களை மேலதிகாரிகள் ஏற்றுக் கொண்டு செயற்படுவர்.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ் வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. “கன்னி செவ்வாய் கடலும் வற்றும்” என்பது பழமொழி. எனவே இக் காலத்தில் விரயங்கள் ஏராளமாக வந்துசேரும். மனக்கலக்கம் அதிக ரிக்கும். மகிழ்ச்சி குறையும். பணி யாளர்கள் உங்களை விட்டு விலக லாம். உறவினர்கள் மற்றும் நண் பர்கள் உங்களுக்கு உதவி செய்வ தாகச்சொல்லி, கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இக் கால த்தில் பஞ்சம ஸ்தானம் வலுப் பெறுவதால் பிள்ளைகளால் பிரச்சி னைகள் தலைதூக்கும். பெற்றோர்




வழி ஆதரவு குறையும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள் வதில் தடைகளும், தாமதங்களும் ஏற்படும். பூர்வ புண்ணிய ஸ்தா னத்தில் சஞ்சரிக்கும் சனி, வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உத்தியோகத்தில் திடீர் மாற்ற ங்களும், மேலதிகாரிகளின் கோப த்திற்கு ஆளாகும் சூழலும் உரு வாகும். புதிய ஒப்பந்தங்களை யோசித்து ஏற்றுக் கொள்ளுங்கள். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் நல்ல சந்தர்ப்பங்கள் வந்து சேரும். புதன் வக்கிர நிவர்த்தி சிம்மத்தில் சஞ்சரிக்கும் புதன், ஆவணி 15ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும்.

புதன் வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் வந்துசேரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறை வேறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். சேமிப்பு உயரும். செயற் பாடுகளில் தொடர்ந்து வெற்றி பெறும் சூழல் உருவாகும். உத்தி யோக உயர்வு உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு நினை த்தது நிறைவேறும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத் தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும். கலைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு கைநழுவிச் சென்றாலும், மற்றொரு வாய்ப்பு வந்துசேரும். மாணவர்க ளுக்கு ஆசிரியர்களின் ஆதரவும், பெற்றோரின் ஒத்துழைப்பும் கூடுதலாக கிடைக்கும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித் தவர்கள் விலகுவர். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

## பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைவீர்கள்!

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 261





கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு அது 'அருகில் நெருங்க வேண்டாம்!' என்று எச்சரித்துக் கொண்டிருக்கும். கோடிக்கரை ஓரத்தில் கடலில் ஆழமே கிடையாது. கட்டு மரங்களும், சிறிய படகுகளும் தான் அந்தப் பகுதியில் கரை ஓரமாக அணுகி வரலாம். மரக்கலமும் நாவாயும் நெருங்கி வந்தால் தரைதட்டி மணலில் புதைந்து விடும். வேகமாகத் தரையில் மோதினால் கப்பல் பிளந்து உடைந்தும் போய் விடும். ஆதலின், கோடிக்கரையில் உள்ள கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளுக்கு மிகவும் அவசியமான உதவியைச் செய்து வந்தது. மற்றொரு பக்கத்தில் குட்டை மரங்கள் அடர்ந்த காட்டின் நடுவில் கோபுரம் ஒன்று தலை தூக்கி நின்றது. அதனடியில் கோடிக்கரைக் குழகர், கோயில் கொண்டிருந்தார். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீசுந்தர மூர்த்தி நாயனார் இந்தக் கோடிக் கரைக்கு வந்தார். காட்டின் மத்தியில் தன்னந்தனியே கோயில் கொண்டிருந்த குழகரைத் தரிசித்தார்.

“அந்தோ! இறைவா! இப்படி இந்தக் கடற்கரைக் காட்டின் மத்தியில் துணையின்றித் தனியே இருந்தீரே? இருக்க வேறு இடமாயில்லை? பக்தர்கள் கூட்டங் கூட்டமாக உமது புகழைப் பாடிக்கொண்டிருக்கும் ஸ்தலங்கள் எத்தனையோ இருக்க, இந்தக் கோடிக்கு வந்து பயங்கரக் காட்டிலே தனியே கோயில் கொண்டிருப்பதேன்? இக்கொடியேனுடைய கண்கள் இந்தக் காட்சியையும் காண நேர்ந்ததே!” என்று மனமுருகிப் பாடினார்.

“கதிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதானயலே இருந்தாற் குற்றமாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே?

“மத்தம் மலிசூழ் மறைக்காடதன் றென்பால்
பத்தர் பலர் பாடவிருந்த பரமா!
கொத்தார் பொழில் சூழ்தரு கோடிக் குழகா
எத்தால் றனியே யிருந்தாய்? எம்பிரானே!

ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார் வந்து தரிசித்துவிட்டுப் போன இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கோடிக்கரைக் குழகர் அதே நிலையில்தான் இருந்தார். (ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைக்கும் கோடிக்கரைக் குழகர் அதே தனிமை நிலையில் தான் இருந்து வருகிறார்!) சுற்றிலும் இன்னும் கொஞ்சம் காடுகள் மண்டிப் போயிருந்தன. அக்காடுகளில் மரப் பொந்துகளில் ஆந்தைகளும் கூகைகளும் குழறின. பார்ப்பதற்குப் பயங்கரமான வேடுவர்கள் சிலர்தான் காட்டின் மத்தியில் ஆங்காங்கு குடிசை போட்டுக் கொண்டு வசித்தார்கள்.

ஆம் ஒரே வித்தியாசம் இருந்தது. ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்திருந்தபோது கலங்கரை விளக்கம் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு, முதற் பராந்தகரின் காலத்திலேதான் அது கட்டப்பட்டது. கலங்கரை விளக்கத்தில் பணி செய்வோருக்கென்று சில ஓட்டு வீடுகள் அதைச் சுற்றிக் கட்டப்பட்டன. கோடிக்கரைக் குழகர் கோயிலில் பூஜை செய்யும் பட்டரும் அங்கே வந்து குடியேறினார்.

பூங்குழலி கடற்கரை ஓரத்தில் படகின் மீது சாய்ந்த வண்ணம் நாற்புறமும் பார்த்தாள். கலங்கரை விளக்கத்தைப் பார்த்து அந்தப் பக்கம் போகலாமா என்று யோசித்தாள். பிறகு குழகர் கோயிலின் கோபுரகலசத்தை நோக்கினாள். அச்சமயம் கோயிலில் சேமங்கலம் அடிக்கும் ஓசை கேட்கவே, பூங்குழலி ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். அதற்குள் வீட்டுக்குப் போய் என்ன செய்வது? கோவிலுக்குப் போகலாம்! பட்டரைத் தேவாரம் பாடச் சொல்லிக் கேட்கலாம். பிறகு பிரசாதமும் வாங்கிக் கொண்டு வரலாம்.

இப்படி முடிவு செய்து கொண்டு பூங்குழலி கோயில் இருந்த திசையை நோக்கி நடந்தாள். ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் துள்ளிக் குதித்துக் கொண்டும் நடந்தாள். வழியில் மான் கூட்டம் ஒன்றைக் கண்டாள். மான்கள் மணல் வெளியைத் தாண்டிக் காட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. ஏழெட்டுப் பெரிய மான்களோடு ஒரு சிறிய மான் குட்டியும் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## தற்பெருமையால் வந்த வினை



கோடை விடுமுறை முடிஞ்சு ஸ்கூல் வந்தாச்சு எப்படி நினைக்கிறனு நண்பன் கேட்டான். எப்பவும் போலதான்டா நம்மள மிஞ்ச யாரு இருக்கா, யாராவது நம்மள அடிச்சிருவாங்களா இல்ல அழத்தான் வச்சிடுவாங்களா என்றான் பென். நண்பன் மனதிற்குள்ளே முனங்கினான், அதான இவன் திருந்திருவானா.

ஆமாம் முன் 'கூட்டியே பென் ஒரு தற்பெருமைவாதி. அப்படினா என்னால் முடியாதது ஏதும் இல்லை, நான் பெரிய பலசாலி, என்னை யாராலும் அழவைக்க முடியாது, விளையாட்டுனு வந்துட்டா என்ன மிஞ்ச யாரு இப்படி அவனுக்குள்ளே பெரிய மனக்கோட்டை கட்டி வாழ்பவன்.

அட நிஜமாவான்னு யோசிக்கிறீங்களா, அதெல்லாம் இல்லை குட்டீஸ் பென் விளையாடுறது எப்போவும் அவனுடைய ஜூனியர் பசங்க கூடத்தான். அப்போ இவன் விளையாடும்போது தோற்கிற மாதிரி இருந்தா இவன் உருவத்தை பார்த்தே அவங்க பென் ஜெயித்ததா ஒத்து கொள்வார்கள். அவன் எப்பவும் போல அவர்களை மிரட்டியே விளையாடிடுவான்.

பென்னோட இந்த நடவடிக்கை பலருக்கும் பிடிக்காது. ஆனால் இவனோட நண்பர்கள் இருக்காங்களே இவன இப்படியே ஏத்திவிட்டு அதில் ஜாலி பண்ணறவங்க. பென்னோட இந்த முரட்டு குணத்தை பத்தி அவங்க அம்மா எடுத்து சொல்லியும் காதில் வாங்கியது இல்லை.

இதையெல்லாம் கவனிச்சிட்டே இருந்த அவனோட ஸ்கூல் மைதானத்தில் இருந்த புல் இவனுக்கு பாடம் புகட்ட ஆசை பட்டுச்சு. ஏன்னா அவன் எப்போவும் மைதானத்தில் விளையாடும்போது மற்ற சிறுவர்களை பயமுறுத்துவது, மிரட்டுவது இந்த மாதிரி வேலைகளை பண்ணி வந்தான். ஒரு நாள் கால்பந்து விளையாடி கொண்டிருந்தான் பென்.

அவன் எப்போடா கீழ விழுவான் என காத்திருந்த அந்த புல், அவன் விழுந்ததும் அவன் கண்களில் தன கூர்மையான இலைகளால் குத்தியது. சில துண்டுகள் அவன் கண்களிலே சிக்கி கொண்டன. அதன் கூர்மையான பகுதி அவன் கண்களில் மிக ஆழமாக குத்தியதால் வலி பொறுத்துக்கொள்ள முடியாமல் கத்த ஆரம்பித்தான் பென்.

அம்மா வலிக்குதே என பயங்கரமாக அழுதான். நண்பர்கள் அவனை ஓடி வந்து தூக்கி முதல் உதவி அறைக்கு கொண்டு போனார்கள். அங்கு அவனுக்கு முதல் உதவி செய்யப்பட்டது. அவனால் மாலை வரை கண்களை திறக்க முடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் வந்து கொண்டே இருந்தது.

வீட்டுக்கு சென்று அம்மாவிடம் நடந்ததை கூறினான். அவன் அம்மா ஒரு சிறு புல் உன்னை அழ வைத்து விட்டது பார்த்தாயா, இங்கு வலியவன், எளியவன் என்று யாரும் இல்லை, என்று அறிவுரை கூறினார். அவனுக்கும் உண்மை உறைத்தது போல் தலையசைத்தான்.

உடனடியாக மாறவில்லை என்றாலும், நமக்கும் வலிகள் உண்டு என்பதை உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சமயங்களினதும் நோக்கம் ஒன்று தான். விலக்க முடியாததை ஏற்றுக் கொள்ளச் செய்வதே அந்த நோக்கம். – கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தைப் பாதுகாக்க இளைஞர்கள் அணிதிரள வேண்டும்

சிவபூமியாகிய இலங்கைத் திருநாட்டில் சைவ சமயத்துக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

தவிர, சைவ சமயத்துக்காகக் குரல் கொடுப்பவர்களை வெட்டிச் சரிக்கின்ற சதிவேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

இதில் சில தமிழ் அரசியல் தரப்புகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகிறது.

அதிலும் மதப் பிரசாரத்துக்காக இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த மத மாற்றக் குழுவொன்று திருப்பி அனுப்பப்பட்ட பின்னர், அதன் எதிர்விளைவு மிகவும் மோசமாக இருப்பதை புத்திஜீவிகள் பலரும் அவதானித்துள்ளனர்.

அதேநேரம் சைவ சமய மதகுருமார், சைவ சமயப் பற்றாளர்கள், சைவ சமய அமைப்புகள் சார்ந்தவர்களை கூலிகளாக விமர்சிக்கின்ற அளவுக்கு மிக மோசமான பிரசாரம் நடக்கிறது.

எழுந்தமானமாக கூலிகள் என்று கூறுகின்ற அநாகரிகத்தை நம் தமிழ் மக்கள் ஒரு போதும் ஜீரணிக்க மாட்டார்கள்.

அதேநேரம் யாருக்கும் எதுவும் சொல்லலாம் என்ற மிகக் கேவலமான நிலைமையை நம் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் ஏற்படுத்தி வருகின்றனர்.

ஈழத் திருநாட்டைப் பொறுத்தவரை சைவ சமயத்துக்கு பெளத்தர்களால் மட்டுமல்ல கிறிஸ்தவ மதமாற்ற சபைகளாலும் ஈனம் இழைக்கப்படுகிறது.

குருந்தூர்மலையில் பெளத்த விகாரை அமைக்கப்பட்டது. எத்துணை நயவஞ்சகமோ அத்துணை நயவஞ்சகத்தனம் மன்னார் திருக்கேதீச்சர ஆலய நுழைவாயில் வளைவைத் தள்ளி விழுத்தியதோடு ஒரு கத்தோலிக்க மதகுரு நந்திக் கொடியைத் தனது சப்பாத்துக் காலால் உழக்கியதன் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மதகுருவின் ஈனச் செயல் கண்டு எத்தனையோ கத்தோலிக்க மதகுருமார் வேதனை அடைந்தனர். அந்தச் செயலைக் கண்டித்தனர்.

ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் அப்போது மெளனமாகினர். அந்த மெளனத்தின் உள்ளார்ந்தம் என்ன? என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது.

ஆகையால் பேரன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! நாம் நாமாக நின்று இந்த நாட்டின் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்தைப் பாதுகாத்து அதனூடு தமிழை வாழ வைப்போம்.

ஆம், எங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழி பக்தி மொழி. அதன் உயிரும் உடலும் உயிர் எழுத்திலும் மெய் எழுத்திலும் வாழ்வதாக எண்ணிவிடாதீர்கள்.

உயிர் எழுத்தின் அகர, உகர, மகரமாய் அமைந்த ஓங்காரத்திலும் மெய் எழுத்தாகிய வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய ஓசை ஒலியிலும் தங்கியுள்ளது.

அந்த ஓங்காரமும் ஓசை ஒலியும் சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருளின் திருத்தாண்டவம், என்பது உணர்தற்குரியது.

ஆகையால் அவரது துணை இவரது துணை என்றில்லாமல், சிவபூமியாகிய இலங்கையில் சைவத்தைப் பாதுகாக்க தமிழ் இளைஞர்கள் அணிதிரள வேண்டும்.

இது நம் தாய்மொழியாம் தமிழுக்குச் செய்கின்ற பெரும் பணியாகும்.

# அடித்தால் திருப்பி அடியுங்கள் அது சட்ட வரம்புக்கு உட்பட்டது

## மனோ எம்.பி

(புதுக்குடியிருப்பு)

அரசாங்கமும், சட்டமும் எங்களுக்கு பாதுகாப்பு தரா விட்டால் எமது குடும்பத்தையும், சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்திய வித்தியாலயத்தில் நடைபெற்ற, மலையகம்-200 நூல் வெளியீட்டு விழாவில் மாத்தளை மாவட்ட ரத்வத்தை தோட்டத்தில் தமிழ் தொழிலாளர் சொத்துகள் சேதப்படுத்தியமை தொடர்பில் கருத்து கூறியமனோகணேசன் மேலும் கூறியதாவது,

அதுதான் உங்களுக்கு புரிகின்ற பாஷை என்றால் அதை பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறேன்.

நீதியரசர் இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காக திருப்பி அடிக்கும் உரிமையின் சட்டவரம்பு பற்றி கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன்.

ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்.

ஆனால்நாம்பலமுறை சொல்லியும், அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களை கண்டும் காணாமல் இருக்கிறது.

ஆகவே பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும் எனத் தெரிவித்தார். (4-7)

# கொழும்பு-மதுரை விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியாவின் "பட்ஜெட் கேரியர்" ஸ்பைஸ்ஜெட் நேற்று முதல் இந்தியாவின் மதுரைக்கும் கொழும்புக்கும் இடையே விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஸ்பைஸ்ஜெட் அதன் அதிகாரபூர்வ ஒன்லைன் முன் பதிவு முறையில்,ஓகஸ்ட் 20 முதல் வாரந்தோறும் 6 முறை மதுரை- கொழும்பு விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் திட்டத்தை உறுதிப்படுத்தியது.

இதன்படி, பட்ஜெட் கேரியர் இந்தியாவின் முதுரை மற்றும் கொழும்பு கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு இடையே புதன்கிழமை தவிர வாரத்தில் ஆறு நாட்கள் விமான சேவைகளை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# குளவி கொட்டியதில் அறுவர் வைத்தியசாலையில்

(நுவரெலியா)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக்கலை தோட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விறகு சேகரிக்க சென்ற ஆறு இளைஞர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான இளைஞர்கள் பிரதேச மக்களால் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்கள் விறகு சேகரிக்க சென்ற போது, அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவி கூடே இவ்வாறு கலைந்து இளைஞர்களை கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான குளவி கொட்டு சம்பவங்கள் தொடர்ச்சியாக பெருந்தோட்ட பகுதிகளில் இடம் பெறுவதாகவும் இது தொடர்பில் தமக்கு தீர்வொன்றை பெற்று தருமாறும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் இப்பிரதேச வாழ் மக்களும்கோரிக்கை விடுக்கின்றனர். (4-7)

# நெருக்கடி ஏற்படாத வகையில் இறக்குமதி கட்டுப்பாடு நீக்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் மீண்டுமொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையிலேயே இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே,மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசு 3,000 க்கும் மேற்பட்ட HS குறியீடு இறக்குமதிகளை நிறுத்த வேண்டியிருந்தது. இதன் மூலம் மட்டுமே நாங்கள் இருப்புகளை பாதுகாத்தோம் மற்றும் இருப்புக்களை பூஜ்ஜியத்திலிருந்து 3 ADOB ஆக அதிகரித்தோம்.

ஒரு நாடு நீண்ட காலத்திற்கு இறக்குமதியை தடை செய்ய முடியாது. ஆகவே கட்டுப்பாடுகள் சிறிது சிறிதாக திறக்கப்பட வேண்டும்.

நாம் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு வளமான பொருளாதாரமாக விரிவுபடுத்துகிறோம், சர்வதேச வர்த்தகத்திற்கு தேவையான வசதிகளை வழங்குவது என்பது இதில் மிக முக்கியமான விடயம்.

எந்தவொரு பொருளின் மீதான இறக்குமதித் தடையை நீக்கும் போது நாங்கள் எல்லா பக்கங்களையும் ஆராய்ந்து பார்க்கிறோம்.

அதன் தேவை, அதன் மாற்றீடுகள் போன்ற ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ந்து தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன என தெரிவித்துள்ளார். (4-7)

# திருகோணமலை துறைமுகம் மீண்டும் பார்வைக்கு

(திருகோணமலை)

திருகோணமலைதுறைமுகம் மற்றும் நிலாவெளி புறாத்தீவை பொதுமக்கள் மீண்டும் பார்வையிடுவதற்கான திட்டத்தை கடற்படை ஆரம்பித்துள்ளது.

உள்நாட்டுமற்றும்வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகள், பாடசாலை மாணவர்கள், கடற்படையினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கடற்படையின் மத்திய பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, திருகோணமலை துறைமுகம் மற்றும் நிலாவெளி புறாத்தீவினை பார்வையிடுவதற்கான சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், குறைந்த கட்டணங்களுடன் தரமான சேவை வழங்கப்படும் என கடற்படை தெரிவித்துள்ளது. (4-7)

# 120 வைத்தியர்கள் கறுப்புப் பட்டியலில்

(கொழும்பு)

நாட்டை விட்டு வெளியேறிய 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று பணிக்குத் திரும்பாத வைத்திய நிபுணர்களே இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி முதல் இந்த வருடத்தின் ஓகஸ்ட் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 363 வைத்தியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.அவர்களில், 120 மருத்துவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை என குறிப்பிடப்படுகின்றது.

நாட்டின் 29 மயக்கவியல் நிபுணர்களில் 12 பேரும் நாடு திரும்பவில்லை.

கறுப்புப் பட்டியலில் உள்ள மருத்துவர்கள் நாடு திரும்ப முடியும் என்ற போதிலும்அவர்கள்சேவையில் ஈடுபடுவதனால், பொதுச்சேவை ஆணைக் குழுவிடம் மேன் முறையீடு செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

11

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இவ்வாறு இருப்பு வைத்துள்ள தங்கத்தினுடைய மதிப்பிற்கு ஏற்ற வாறு அந்த நாட்டு அரசாங்கம் செலாவணி அல்லது நாணயம் அல்லது ரூபாய் நோட்டுகளை வெளியிடுகிறது.' தங்க இருப்பை வைத்தே ஒரு நாட்டின் நாணய மதிப்பு கணக்கிடப்படுகிறது.

**தங்கத்தின் மதிப்பு**

தங்கம் காரட் என்ற அலகால் மதிப்பிடப்படுகிறது. 24 காரட் என்பது சுத்தத் தங்கமாகும். இதில் ஆபரணங்கள் செய்ய முடியாது. 22 காரட் முதல் 9 காரட் வரை தங்க நகைகள் செய்யப்படுகின்றன. 22காரட் தங்கம் என்பது 91.6 சதவீதம் தங்கமும் 8.4 சதவீதம் செம்பு, வெள்ளி போன்ற மற்ற உலோகமும் கலந்ததாகும். 18 காரட் என்பது 75 சதவீதம் தங்க மும், 14 காரட் என்பது 58.5 சதம் தங்கமும், 9 காரட் என்பது 37.5 சதவீதம் தங்கமும் கலந்ததாகும். சேர்க்கப்படும் உலோகங்களுக் கேற்ப தங்கத்தின் மதிப்பு கிடைக்கி றது. 22 காரட்டில் செய்யும் தங்க நகைகள் எளிதில் சேதம் அடையக் கூடியவை. காரட் குறையக் குறைய தங்க நகைகளின் தன்மை கெட்டி யாகவும் உறுதியுடனும் இருக்கும்.

நாணய (பண) மதிப்பின் இயக் கம் தங்கத்தின் விலைகளில் மாற் றத்தைத் தீர்மானிக்கும் மிகப் பெரிய காரணியாகும். இலங்கை யில் எப்போதுமே அமெரிக்க டொலர்களுக்கு நிகரான ரூபாயின் மதிப்பு குறையும் போது தங்கத் தின் விலை அதிகரிக்கும். அதே போல ரூபாயின் மதிப்பு அதிகரிக் கும் போது தங்கத்தின் விலை குறையும்.

அதாவது தங்கத்தின் இருப்பும் நாட்டின் பணமதிப்பும் எப்போது இறங்கும் ஏறும் என சொல்ல முடியாது. உலக வர்த்தகத்தில் அந்தந்த நாட்டின் பணமதிப்பு குறையும்போது தங்கத்தின் விலை அதிகரிக்கிறது.

2000ஆம் ஆண்டிற்கு பிறகு தங்கத்தினை அதிகம் உற்பத்தி செய்த நாடாக சீனா விளங்குகிறது. சீனா 520 தொன் தங்கத்தை உற் பத்தி செய்தது. சீனாவைத் தொடர் ந்து அவுஸ்திரேலியாவும், ரஷ்யா வும் அதிக தங்கத்தை உற்பத்தி செய்த நாடுகளாக விளங்குகின்றன.

2014 ஆம் ஆண்டில் தங்கம் அதிகம் உற்பத்தி செய்த நாடு களில், முதன்மையானதாக சீனா வும் அதனைத் தொடர்ந்து அவுஸ் திரேலியா, ரஷ்யா, ஐக்கிய அமெரி க்கா, கனடா, பெரு ஆகிய நாடுக ளும் விளங்கின. 20ஆம் நூற்றா ண்டில் தங்க உற்பத்தியில் முன் னணி வகித்த தென்னாபிரிக்கா ஏழாம் இடத்தில் இருந்தது. இந்நாடு களுடன் கானா, மாலி, புர்கினா ஃ பசோ, இந்தோனேசியா, உஸ்பெஸ் கிஸ்தான் ஆகியவையும் பிரதான தங்க உற்பத்தி நாடுகள் ஆகும்.

உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினை காரண மாக பல நாடுகள் தங்களின் வள த்தை பதுக்க தொடங்கியுள்ளன. உதாரணமாக எண்ணெய் வள மிக்க நாடுகள் எண்ணெய் உற் பத்தியை குறைத்துக்கொண்டுள் ளன. தங்க வளமிக்க நாடுகள் தங்க உற்பத்தியை குறைத்துக்கொண்டுள் ளன. பல நாடுகள் தங்களின் ஏற்று மதி இறக்குமதி வர்த்தகத்தில் குறிப்பிட்ட அளவு கவனம் செலுத்தா மல் அதாவது உலக வர்த்தகத்தில் ஈடுபடாமல் இருக்கும்போது உலக பங்கு சந்தையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்த வகையில்தான் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும் தங்கத் தின்மீது திரும்புகிறது. தங்கத்தின் இருப்பு என்பது ஏற்கனவே பார்த்தது போல் நாட்டின் பணமதிப்பை வலு ப்படுத்தக்கூடியது. இதன் காரணமாக சீனா, ரஷ்யா ஆகிய இரண்டு நாடு கள் 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தங்கத்தின் மீது முதலீடு இருமடங்கு அதிகம் செய்துள்ளன.

சீனா, ரஷ்யா நாடுகள் உலகின் பொதுவான நாணயமான டொலரை விற்று தங்கமாக மாற்றிக் கொள் கின்றன. அதுமட்டுமன்றி உலக நாடுகளின் சொத்து ஒதுக்குகளில் தங்கத்திற்கு அடுத்தபடியாக முக்கி யமான ஒதுக்குச் சொத்தாகத் திகழ் வது ஐக்கிய அமெரிக்காவின் டொல ராகும்.

தங்க விலை என்பது எந்த தனிப் பட்ட நபர் அல்லது அமைப்பால் அல்லது நகைக் கடையால் நிர்ண யிக்கப்படுவதல்ல. அதாவது தங்கத் தின் விலை என்பது மிதப்புச் சந்தை (Floating Market) வழியாகவே நிர்ணயிக்கப்படுகிறது. பங்குச்சந்தை போல் இருக்கும் சரக்கு வர்த்தகம் (Commodity Trading) போன்ற உலோக வர்த்தக மையங்களில் வர்த்தகம் செய்யப்படுவதை வைத்து தான் தங்க விலையும் மாறுகிறது. பொதுவாக London Bullion Market Association ஆல் தங்க விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

விலைகள் தினமும் காலை GMT நேரம் 10:30 மணிக்கும் , GMT நேரம் பிற்பகல் 3 மணிக்கும் அமெரிக்க டொலர்களில் நிர்ண யிக்கப்படுகின்றன. [illegible] நாட்டில் அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்தால் தங்கத்தின் விலையும் அதிகரிக்கும்.

**அமெரிக்க டொலரும் இலங்கை ரூபாவும்**


1977 இல் திறந்த பொருளாதாரம் திறக்கப்பட்டதில் இருந்து 45 வருட வரலாற்றில் (2022) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கையின் ரூபா 48.46% வீதத்தால் வீழ்ச்சி யடைந்துள்ளது. அதன்படி ஜனவரி 1, 1977 இல் இலங்கை ரூபாயின் அடிப்படையில் அமெரிக்க டொலர் மாற்று வீதம் ரூ. 7.27 ஆக இருந் தது. 13 யூலை 2022இல் ஏறத்தாழ 45 வருட வரலாற்றில் அமெரிக்க டொலர் இலங்கையின் ரூபாவில் 359.64 இற்குச் சமனாகும்.

1948 இல் இலங்கை ரூபாயின் அடிப்படையில் அமெரிக்க டொலர் மாற்று வீதம் ரூ. 3.32 ஆக இருந் தது. அதன் அடிப்படையில் ஏறத் தாழ 75 வருட வரலாற்றில் அமெ ரிக்க டொலருக்கு எதிராக இலங் கையின் ரூபா 10732% வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1948 இல் 1 ரூபாய் US $ 0.30 இற்கு சமமாக இருந்தது. அதாவது இலங்கை 1 ரூபாய் அமெரிக்க டொலரில் 30 சதத்திற்கு சமமாக இருந்தது. அமெரிக்க டொலரும் இலங்கை ரூபாவிற்கு உள்ள தொடர்புகள் பற்றி மூன்று வரை புகளும் ஒரு அட்டவணையும் இங்கு தரப்பட்டுள்ளன.

இவ் அட்டவணைகள், வரைபு களில் 1960இலிருந்து 2020ஆம் ஆண்டு வரையுமான இலங்கை ரூபாயின் அடிப்படையில் அமெரிக்க டொலர் மாற்று வீதத்தைப் பார்க் கும் போது 1960 -1978 காலப் பகுதியில் பெரிய மாற்றம் நிகழ வில்லை.

**டொலர்-ரூபா பெறுமதி 2012- யூலை 2022**

| | ஒரு டொலருக்கான ரூபாவின்பெறுமானம் | | |
|---|---|---|---|
| ஆண்டு | இழிவு பெறுமானம் | உயர்வு பெறுமானம் | சராசரி பெறுமானம் |
| 2012 | 113.622 | 134.036 | 129.999 |
| 2013 | 124.741 | 133.517 | 130.368 |
| 2014 | 129.460 | 132.358 | 130.559 |
| 2015 | 130.241 | 145.023 | 133.855 |
| 2016 | 140.928 | 149.460 | 144.100 |
| 2017 | 145.225 | 153.728 | 149.531 |
| 2018 | 149.660 | 182.946 | 157.824 |
| 2019 | 171.538 | 184.018 | 177.183 |
| 2020 | 177.765 | 190.344 | 182.426 |
| 2021 | 183.301 | 200.292 | 196.396 |
| யூலை 2022 | 197.903 | 366.5432 | 294.823 |







(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

விஜயமாக இன்று சிங்கப்பூர் செல்ல வுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த விஜயத்தின்போது சிங்கப் பூர் ஜனாதிபதி ஹலிமா யாக்கோப், பிரதமர் லீ சியென் லூங்மற்றும் ஏனைய உயர்மட்ட பிரமுகர்களை சந்திக்க உள்ளார்.

பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் கார்பன் நடுநிலை ஒப்பந்தமும் அவரது பய ணத்தின்போது கையெழுத்திடப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுக்களை மேற்பார்வை யிட நான்கு பதில் அமைச்சர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். (4-7)

## மூன்று இடங்...

தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில்23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற இனந்தெரியாத மூவர், துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர், போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பு டையவர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளையில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் இளைஞர் ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

தெஹிவளை ஓபன் பிளேஸ் விளை யாட்டு மைதானத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இனந்தெரியாத இருவர் இந்தத் துப் பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பி யோடியுள்ளனர்.

இதேவேளை, பேராதனை முரத லாவ பிரதேசத்தில் பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளை ஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டி - வட்டுவளை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

நீதிமன்றத்தில் பிடியாணை பெற்ற சந்தேகநபரான குறித்த இளைஞரைக் கைது செய்யச் சென்றபோது, இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. (4-7)

## ஒப்புதல்...

பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

இதற்காக நாகை துறைமுகம் தயா ராகி வருவதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

அத்துடன், இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு இடையே கப்பல் சேவையை புதுப் பிக்க ஆலோசனைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## வவுனியாவில்...

னர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவு னியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் தாக்கி நிலத்தில் தூக்கி போட்டுள்ள னர்.

இதனால் இளம் குடும்பஸ்தர் படு காயமடைந்துள்ளார். இதனை யடுத்து, அங்கு நின்றவர்கள் அவரது வீட்டிற்கு தகவலை தெரியப்படுத்திய தையடுத்து, படுகாயமடைந்த குடும் பஸ்தரின் தாயார் வருகை தந்து வவு னியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவசர சிகிச்சை பிரிவில் அனு மதிக்கப்பட்டபோதும் குறித்த குடும் பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்தார்.

இச்சம்பவத்தில், வவுனியா, மகா றம்பைக்குளம் காந்தி வீதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன் (தீபன்) என்பவரே உயிரிழந்த வராவார். (4-7)

## நல்லூர்க்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற் சவம் இன்று 21 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம் பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் இடம் பெற வுள்ள இம்மஹோற்சவத்தில் செப் ரெம்பர் 13 திகதி, புதன்கிழமை காலை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது டன் மறுநாள் வியாழக்கிழமை காலை 6.15 மணிக்குத் தீர்தோற்சவமும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு பூங்காவன உற்சவமும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு வைரவர் சாந்தியும் நடைபெறவுள்ளன. (4-7)

## டிப்பர் - மோ.சைக்...

குள்ளாகியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த பரந்தன் உமையாள்புரத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் நகுலேஸ்வரன் (வயது-47) படுகாயங்களுக்கு உள் ளான நிலையில் சிகிச்சைக்காக கிளி நொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பான விசாரணை களை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு பொலிஸார் டிப்பர் வாகன சாரதியை கைது செய்ததோடு மேலதிக விசார ணைகளையும் முன்னெடுத்து வரு கின்றனர். (4-7,316)

## தட்டுப்பாடு...

பித்ததாகவும், ஆனால் விவசாயிகள் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை விற்பனை செய்யாததால் அரசிடம் கூடுதல் அரிசி அல்லது நெல் இருப்பு இல்லை எனவும் தற்போது நெல் இருப்பு தனியாரி டம் இருப்பதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

தனியார் வசம் உள்ள நெல் இருப்பு காரண மாக அரிசியின் விலை உயரும் பட்சத்தில் அத ற்கு முகம் கொடுத்து நுகர் வோரை பாதுகாக் கும் வேலைத் திட் டத்தை அர சாங் கம் நடை முறைப் படுத்த வேண்டும் என வும் அமைச் சர் குறிப்பிட்டுள் ளார். (4-7)

## குருந்...

தரப்பினரே பொங் கல் வழிபாடு களை முன்னெ டுத்தனர்.

முல்லைத்தீவு குருந்தூர் மலை யில் தமிழ் மக்கள் பொங்கல் வழி பாடுகளை மேற் கொள்ள நீதி மன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும் இதனை நாம் தவறான தீர்மானமாகவே கருதுகிறோம்.

நீதிமன்ற உத் தரவை மதிக்கும் வகையில் நாம் இதற்கு இடை யூறு விளைவிக்கா திருந்தோம். எனி னும், இங்கு நடை பெறும் இறுதி பூஜையாக அல் லது நிகழ்வாக இது இருக்க வேண்டும்.

குருந்தூர் மலையில் அமைக்கப் பட்ட விகாரை தொடர்பாக முல்லைத் தீவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தீர்ப்புக்களையும் சவாலுக் குட்படுத்தி நாம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளோம்.

இந்த பிரச்சினையை மேன்முறை யீட்டு நீதிமன்றில் தீர்த்துக்கொள்ள நாம் எதிர்பார்த்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். (4-7)

## நெல்லியடியில்...

மடைந்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக வசிக்கும் 31 வயதுடைய செல்வநாயகம் வின்சன் மனோஜ்குமார், கரவெட்டி வதிரியைச் சேர்ந்த 29 வயதுடைய விஜயகாந்த் நிசாந்தன் ஆகிய இருவருமே இவ் வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருவதுடன் சடலம் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (4-7,33,60,104)


மெகா பவர்
திகதி 20/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1560
Y 25 07 23 29 30
72513

தன நிதானய
திகதி - 2023.08.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1242
U 11 30 44 69 U
40544

லக்கி 7
திகதி 20.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0038
L7 இலக்கம் 0 8
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 2 0 7 6 7 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3454
சீட்டிழுப்பு திகதி 20.08.2023
Y 37 46 47 75
Y 79746

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 521
மிதுனம் 21 25 30 35 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/20
சீட்டிழுப்பு இலக்கம் 5212
E 4 0 4 4 5 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2186
சீட்டிழுப்பு திகதி 2023.08.20
வர்ணம் செம்மஞ்சள்
தினம் ஞாயிற்றுக்கிழமை
21 33 43 64 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,091,516.40
09 25 42 44 Q

சனிதா
திகதி 2023.08.20 வெற்றி வாரம் 4347
11 43 50 52 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,856,876.00
02 19 30 49 E

சசிரி
வெற்றி வாரம் 365
சீட்டிழுப்பு திகதி 2023.08.20
கபிலம்
03 30 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,229,080/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3898
சீட்டிழுப்பு திகதி 2023.08.20
வர்ணம் ஊதா
தினம் ஞாயிற்றுக்கிழமை
03 23 52 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,065,404/-
06 35 36 39

கப்ருக
திகதி 20.08.2023 வெற்றி வாரம் 1362 வர்ணம் மஞ்சள்
J 20 02 04 67 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.430,365,904.20
03 05 16 20 Z

அத கோட்டிபதி
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2012
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,872,640/-
சீட்டிழுப்பு திகதி : 2023.08.20
18 19 47 62 E
24 33 54 59 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16759)

076 825 7716 (ஆகாஸ்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
AAT (Sri Lanka)
(AA1 - 26/08/2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம் (C-7101)

Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

# காட்டிற்கு தீ மூட்டிய காதல் ஜோடி கைது

(குருநாகல்)

தீக்குச்சியை பற்றவைத்து காட்டுக்குள் வீசியமையால் அந்த காடு எரிந்துள்ள சம்பவத்தை அடிப்படையாக வைத்து காதல் ஜோடி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் ஏத்துகல மலை உச்சியில் தீக்குச்சிகளை ஏற்றி தீ வைத்த குற்றச்சாட்டின் கீழ் இந்த ஜோடி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் பதில் நீதவான் சட்டத்தரணி நளீன் ஜே எதிரிசிங்க உத்தரவிட்டார். (4.7)

SILVER SHIELD ONE DOZEN

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில் (C-7104)

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

காணி விற்பனைக்கு

சுழிபுரம் கிழக்கு அத்தத்தான் கடைக்கு அண்மையில் பிரதான வீதியோரமாக 6 பரப்பு வளவு கிணற்றுடனும் சுழிபுரம் காட்டுப் புலத்தில் 10 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு (16776)

077 736 6699

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=

(16349)
T.P:077 544 8503

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16778)

076 057 0354, 076 826 0354

WORK IN UK
WORK PERMITS
கட்டுமான தொழிலாளர்கள்
➤ 5 YEARS WORK PERMIT
➤ குடும்பத்தினருடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
➤ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிட வீசா
- கட்டட தொழிலாளர்
- நீர்க்குழாய் பொருத்துனர்
- கம்பி கட்டுபவர்
- சட்டரிங் வேலை செய்பவர்
- தச்சுத்தொழிலாளர்
- எலெக்ரீசியன்

(C-7103)
போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்
CIMS COLLEGE 0777-068-777

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்
(C-7103)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 - 02 - 1956

மறைவு 20 - 08 - 2023

### சிவலோசனி புவனேந்திரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - வேம்படி மகளிர் கல்லூரி)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலோசனி புவனேந்திரன் அவர்கள் நேற்று 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பாக்கியம் தம்பதியினரது புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராசா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரது மருமகளும் நடராசா புவனேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - அச்சுவேலி மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும் நிவேதன்(லண்டன்), நிசாலினி(லண்டன்), நிருஷன் ஆகியோரது அன்புத் தாயாரும் சுகிர்தா(லண்டன்), அழகீசன்(லண்டன்), மகிழினி ஆகியோரது அன்பு மாமியாரும் அஷ்சரன், ஆதிரன், சாத்விகா, சஜானன், மித்திரன் ஆகியோரது அன்புப் பேர்த்தியும் Dr.மீனலோசனி, காலஞ்சென்றவர்களான பத்மலோஜனிதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற Dr.விவேகானந்தன் மற்றும் மகேசன், நாகேந்திரன், அமிர்தலிங்கம், பரமலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரது அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.08.2023 திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் 82, பலாலி வீதி, உரும்பிராய் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அன்னாரின் பிறப்பிடமாகிய இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 207 4373
077 858 8767 (மகன்)

தகவல்:
கணவர் - புவனேந்திரன்
(16773)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1942 - 09 - 01

இறப்பு 2023 - 08 - 18

### திருமதி உதயலட்சுமி பேரம்பலம்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயலட்சுமி பேரம்பலம் அவர்கள் 18.08.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - பூமணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் பேரம்பலத்தின் அன்பு மனைவியும் நாகதேவி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), நாகநந்தினி (பிரான்ஸ்), நாகநந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரகுமார், ஜெகநாதன் (பிரான்ஸ்), காயத்திரி ஆகியோரின் மாமியாரும் ஸாயித்தியாவின் அன்பு அப்பம்மாவும் சீராளன், சற்குரு (கனடா), காலஞ்சென்றவர்களான மகேந்திரன், யோகலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி, ஜெகதீஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி (ஜெயம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (22.08.2023) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

172, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(16777)

தகவல்: குடும்பத்தினர்
தொ.இல : 077 959 7310

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிரெட் ஸ்தாபனத்தால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org